RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-222816

OPEN ACCESS

# கிறிஸ்தவ சமய வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்

ஜே. பாஸ்கர் வேளாங்கண்ணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா.

# Christian Liturgical Traditions and Beliefs

J. Baskar Velanganni [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet, Tamil Nadu, India

* Corresponding Author: baskartamil1990@gmail.com

Received: 20-09-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Worship and belief are the relationship between the environment and the human being, the transmission from one generation to another, the speeches of the people, the jokes, the arts, the festivals, etc., are the elements that indicate the cultural state. The religion followed by the ancients was followed by the later ones. After the arrival of Menatar, the situation began to change slightly, and due to circumstances some people were converted. Their cults have changed slightly. Though they have adopted a new religion, they have not given up their culture and have adopted some new rituals.

**Keywords:** Worship, Culture, Beliefs, Traditions

## முன்னுரை

பண்டைய காலம் தொட்டு இன்று வரை நாம் இறைநம்பிக்கையில், நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம். நம்மைவிட ஒரு மேலான சக்தி நம்மை இயக்கி கொண்டிருக்கிறது என்பதை உணர்கின்றோம். நாட்டார் வழிபாட்டில் எந்த ஒரு செயலை செய்வதற்கு முன் கடவுளின் மீது நம்பிக்கை கொண்டே அச்செயலை தொடங்குகின்றனர். தனக்கு ஏற்படும் நன்மை, தீமைகளை எல்லாம் இறைவன் பார்த்துக் கொள்வான் என்று நம்புகின்றனர். அவ்வகையில் கிறிஸ்தவ சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு மரபுகளையும் ஆய்வதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

## கிறிஸ்தவ சமயம்

நாட்டுப்புற மக்கள் எதையுமே எளிதில் நம்பிப் பின்பற்றும் பண்புடையவர்கள் நம்பிக்கையே மனிதனின் மூன்றாம் கை என நம்பினர். நம்பிக்கையே நாட்டுப்புறவியலின் அடிப்படை பொதுக்கூறு.

“பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியது. அவற்றை பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்”

கிறிஸ்தவ சமயம் முதல் நூற்றாண்டில் தோன்றினாலும் அவை தமிழகத்தில் சில பிரிவினர் பின்பற்றியது மேனாட்டினர் வருகைக்கு பின்னரே ஆகும். இயேசுவின் சீடர்களில் ஒருவரான புனிததோமா என்பவர் கி.பி.52ல் இந்திய வந்ததாக கூறப்படுகிறது. இவர் கேரளா,

தமிழகம் போன்ற பகுதிகளுக்கு வந்து இயேசுவின் போதனைகளை மக்களிடையே பரப்பி மக்களை மதமாற்றத்திற்கு உட்படுத்தினார் என கூறப்படுகிறது.

"ரம்பன்பாட்டு என்ற வரலாற்று நிகழ்வுகளை உள்ளடக்கிய பாடல் தொகுப்பு ஒரே வருடத்தில் 1400 பேர் மதம் மாறியதாகவும், இந்நிகழ்வின் தொடர்ச்சியாக கொல்லத்தில் கோவில் ஒன்று கட்டப்பட்டு அதில் சிலுவை நாட்டப்பட்டது என்று கூறப்படுகிறது".

கிறிஸ்தவச் சமயத்தைக் கீழ்த்திசை நாடுகளில் பரவச் செய்ய போர்த்துக்கீசியர்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் என்றைக்கும் மறந்துவிடாது. கிறிஸ்தவம் குறிப்பாக இந்தியாவில், கேரள, தமிழக மக்களிடையே பெரும் வாழ்க்கை மாற்றங்களை தோற்றுவித்துள்ளது.

புனிததோமா மறைசாட்சியாக சில அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அதில் குணமாக்கள் வழிபாடு குறிப்பிடத்தக்கது. இவரது போதனைகளை பின்பற்றிய மக்கள் கிறிஸ்தவமதத்திற்கு மாறியுள்ளனர். இவர் தன வாழ்நாளில் இறுதி நாட்களை சென்னை மைலாப்பூரில் கழித்துள்ளார். இவரின் கல்லறை சாந்தோம் பேராலயத்திற்கு அருகாமையில் உள்ளது.

## கிறிஸ்தவ சமய வழிபாட்டு மரபு

கிறிஸ்தவ சமய வழிபாட்டு முறையில் தனிநபர் வழிபாடு, கூட்டுவழிபாடு மிக முக்கிய இடத்தினை பிடித்துள்ளது. கூட்டுவழிபாட்டில் குருக்கள், சபையோர், இறைமக்கள் அனைவரும் கலந்து கொள்வர். இதில் பற்றுறுதி அறிக்கை, பிழையுணர்தல், பரமண்டலஜெபம் போன்றவை சபையோரும் இறைமக்களும் சேர்ந்து கூறுகின்றனர்.

இவ்வழிபாட்டு முறைகளில் காணப்படும் தமிழ் பற்றி டாக்டர். மோசசு மைக்கேல் பாரடே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"கிறிஸ்தவத்தைப் பொதுவாகச் சபை வழிப்பட்ட சமயம் எனக்குறிப்பிடுவார். கிறிஸ்தவம் கூட்டுத் தொழுகைக்கு முதன்மை தருவது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிற சிறப்பு நாட்களிலும் செய்யப்படும். கூட்டுத்தொழுகை பெரும்பாலான மரபு வழிப்பட்ட திருச்சபைகளில் நன்கு வடிவமைக்கப்பட்டதொரு வழிபாட்டுமுறையைத் தழுவி அமையும். இவ்வழிபாட்டு முறையில் கடவுளை போற்றி உரைக்கும் துதி, தங்கள் குறை நினைத்து உருகும் பாவ அறிக்கைகள் பற்றுறுதி வெளிப்பாடுகள், அருளுரைகள், ஆசிர்வாதம் போன்றவை இடம்பெறும்".

தென்னிந்திய திருச்சபை வழிபாட்டு நிகழ்வில்,

1. கீதம் அல்லது கடவுள் வாழ்த்து
2. முகவுரை - வேத வசனம்
3. மௌனமாக பிரார்த்தனை செய்தல்
4. பாவ அறிக்கை
5. நன்றி செலுத்துதல்
6. சங்கீதங்கள்
7. வேதவாசிப்பு
8. பிரசங்கம்
9. காணிக்கை
10. பிராத்தனையும் ஆசிர்வாதமும் என்ற முறையில் வழபாடு நடைபெறும்.

சங்கீதம் என்னும் திருவிவிலியப் பகுதியை வழிபாட்டை நடத்துபவரும் சபையினரும் மாறிமாறி வாசிப்பது இடம் பெறுகிறது. இதற்குப் பின்னால் "பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக" என்று கூற ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக என்று கூறுவதும் மரபாக உள்ளது. இவ்வழக்கம் நான்காம் நூற்றாண்டு முதல் திருச்சபையில் இருந்து வருகிறது.

## நற்கருணை வழிபாடு

கிறிஸ்தவ மக்கள் ஆலயத்தில் நுழைந்தவுடன் நற்கருணை பேழையின் முன்பாக மண்டியிட்டு நற்கருணையில் பிரசன்னமாகி இருக்கும் இயேசுவை வணங்கி ஆராதிக்கின்றனர். இயேசுவின் பிரசன்னத்தை உணர்த்தும் வண்ணம் நற்கருணை பேழையின் அருகில் அணையா விளக்கு ஒன்று எப்போதும் ஒளிர்ந்து கொண்டே இருக்கும். இதேபோன்று ஒளிர் விளக்குகளை பிறசமய கோவில்களிலும் காணலாம் (Sivasubramanian, 2014).

"நற்கருணையை நம்மீட்பர் இயேசு கிறிஸ்துவின் சதை"

என குறிப்பிடுகிறார் அந்தியோக் புனித இக்னேசியஸ்.

"உணவை விட மேலானது"

என குறிப்பிடுகிறார் புனித ஜஸ்டின்.

நற்கருணை கொண்டாட்டத்தை திருப்பலி என்று அழைக்கப்படுகிறது. கத்தோலிக்க போதனையின்படி திருப்பலி (வழிபாடு) ஒப்புக் கொடுக்கப்படும். அப்பமும் ரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றம் அடைகின்றன. மேலும் இயேசு தனது ஆன்மாவோடும் இறைத் தன்மையோடும் அவற்றில் பிரசன்னமாகி இருக்கிறார்.

வழிபாட்டின் போது குருவானவர் அப்பத்தை உயர்த்தி "கிறிஸ்துவின் உடல்" என்றும் இரசக்கிண்ணத்தை உயர்த்தி "கிறிஸ்துவின் இரத்தம்" என்றும் கூறுவார். இவற்றில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகி இருக்கிறார். அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெறுபவரும் கிறிஸ்துவை முழுமையாக பெற்றுக்கொள்கிறார் (Alice, 2004).

## கிறிஸ்து பிறப்பு பெருவிழா

இயேசு கிறிஸ்து பிறப்பு விழா "கிறிஸ்துமஸ்" என்று அழைக்கப்படுகிறது. இவ்விழா கிறிஸ்து இறந்து 336ம் ஆண்டில்தான் கொண்டாடத் துவங்கினார்கள். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25ம் நாள் இயேசு பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றனர். பரிசு பொருட்கள் கொடுக்கும் வழக்கமும் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் தினத்தன்று பரிசு பொருட்கள் வழங்குவது ஏன் என்றால் புனித மத்தேயு எழுதிய வேதாகமத்தின்படி,

"உலகை உய்விக்கப்பிறந்துள்ள அன்னை மேரியின் தவப்புதல்வராம் குழந்தை இயேசுவைக் கண்டு தரிசிக்க வந்த மூன்று ராஜாக்கள் அந்த குழந்தையின் முன்பு மண்டியிட்டு வண்ங்கினார்கள். பின்னர் அவர்கள் தாங்கள் கொண்டு வந்த பொக்கிசத்தை திறந்து பொன்னும் பொருளும் பரிசாக அளித்தனர்" இதனால்தான் அன்றைய நாளில் பரிசுகள் வழங்கப்பட்டது. 1800 வரை இந்த வழக்கம் இருந்ததாக தெரியவில்லை.

## பெரிய வியாழன்

பெரிய வியாழன் அல்லது புனித வியாழன் என்பது கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் இறுதி நாளை நினைவு கூர்ந்து வழிபடுவது ஆகும். இயேசு உயிர்ப்பு நாளுக்கு முன் வரும் வியாழன் பெரிய வியாழன் ஆகும்.

உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று கூறிய இயேசு பணிவிடைபெற அல்ல பணிவிடைபுரியவே என்று தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி இறையரசுப் பணிக்கு சான்று பகர்ந்தார்.

நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்தி, நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செய்யுங்கள் என்று அன்பு கட்டளை வழங்கிய நாள் பெரிய வியாழன்.

## புனித வெள்ளி

பெரிய வெள்ளி அல்லது புனித வெள்ளி என்று குறிப்பிடப்படும் நாள் கிறிஸ்தவ மக்களிடையே அது ஓர் துக்கம் நிறைந்த நாள். "இயேசுவை சிலுவையில் அறைந்த நாள்".

"புனித வெள்ளி அன்று ஒரு சந்திபோசனம் அனுசரித்தல். வீட்டின் முன் சாணி தெளித்து கோலமிடாமை, மொச்சை அல்லது பயிறு அவித்தல். மரித்த ஆண்டவரின் சொருபத்திற்கு கோடி போடல் என்பன தமிழ்நாட்டில் இறப்புச் சடங்குடன் தொடர்புடைய செயல்கள் இவையெல்லாம் திருச்சபையின் அனுமதி பெற்றோ, பெறாமலோ மக்கள் மேற்கொண்ட பண்பாட்டு ஏற்றல் ஆகும்".

உங்கள் துக்கத்தில் பங்கு கொள்கிறோம் என்று நாம் யாரிடமாவது கூறுவது வெறும்வார்த்தையே உண்மையில் துக்கத்தை அனுபவிக்கிறவர்களின் அனுபவத்தில் கொஞ்சத்தையும் நாம் வாங்கிக் கொள்வதில்லை. ஆனால் மன ஆறுதலுக்காக சொல்கிறோம். இறை மகனாம் இயேசு கிறிஸ்து தன் சிலுவைப் பாதையை தேர்ந்து கொண்ட போது, அவரின் சீடர்கள் துக்கமடைந்தார்கள். ஆனால் இயேசு அந்த துக்கத்தை தன் கடமையாக ஏற்றுக் கொண்டார்.

## உயிர்ப்பு பெருவிழா (ஈஸ்டர்)

சிலுவையில் மரணமடைந்த இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனர். இந்நிகழ்வு கிபி.33ல் நடந்தது. இயேசு தன் சீடர்களுக்கு கூறியது போலவே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் - ஏப்ரல் மாதத்தில் 40 நாள் தவக்காலத்திற்கு பின் நடைபெறும். இவ்விழாவினை உயிர்பு விழா (பாஸ்கா) நாடகமாகவும் நடித்துக் காட்டுவர்.

"பாஸ்கா என்பது எபிரேய மொழியில் கடந்து செல்லுதல் என்று பொருள்" இது இஸ்ரேல் மக்கள் எகிப்திலிருந்து மீட்பு பெற்றதன் நினைவாக கொண்டாடப்படும் விழா.

"நம் பாஸகா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார்"

என்று திருத்தூதர் பவுல் கூறுகிறார்.

இயேசுவின் சிலுவைப்பாடுகளையும், உயிர்பினையும் நினைவு கூர்ந்து இவ்விழா கொண்டாடப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம் - மேட்டுப்பட்டி, பஞ்சம்பட்டி, மைக்கேல்பாளையம் இன்னும் பல ஊர்களில் பாஸ்கா நிகழ்வு மேடை நாடகமாக நடிக்கப்படுகிறது. உயிர்ப்பு பெருவிழாவிற்கு முன், இரண்டு நாட்கள் நடைபெறும். இதனை காண மக்கள் திரளாக கூடுவர். இயேசுவை கல்லறைக்கு கொண்டு செல்லும் முன் மாரடித்து ஆடும் ஆட்டமும் பஞ்சம்பட்டியில் நிகழ்கிறது. இதன்பின் வியாகுலமாத புலம்பல் ஒப்பாரியாக பாடிக் கொண்டு கல்லறைக்கு செல்வர். மூன்றாம் நாள் உயிர்த்தெழும் நிகழ்வு நடைபெறும்.

## கிறிஸ்துவ சமய நம்பிக்கைகள்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்த நம்பிக்கையைப் பின்பற்றுவதால் தங்கள் வாழ்க்கை வளமும் நலமும் பெறும் என மக்கள் நம்புகின்றனர்.

இயற்கையின் பாதிப்புகளுக்கு உட்பட்ட நிலையில்தான் மனிதனிடத்தில் கடவுள் நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் தோன்றின. ஒரு சமூக அமைப்பின் மரபினைக் கண்டு கொள்வதற்கு அச்சமூகத்தின் நம்பிக்கைதான் துணைபுரிகின்றன. இந்த நம்பிக்கை சமூகத்தின் தேவை கருதியும் குறிக்கோளினை மையப்படுத்தியும் வளர்ந்து வருகின்றன. இயற்கையின் செயல்கள் மனிதனுக்கு ஒரு புதிராக தோற்றமளித்தன. இப்புதிரான செயல்களால் தமக்கு ஏதாவது தீங்கு நேருமோ என அஞ்சினான். அந்த அச்சத்தின் விளைவால் தோற்றம் பெற்றதே நம்பிக்கை.

நம்பிக்கையின் அடிப்படையிலேயே வழிபாடு நிகழ்கிறது. தங்களின் முன்னோர்கள் வழிபட்டு வந்த தெய்வத்தினை விடுத்து புதிய தெய்வத்தினை ஏற்றுக் கொண்டனர். இவை ஓர் சூழல் காரணமாகவே ஏற்பட்டது.

மக்களிடையே ஏற்றத்தாழ்வு அதிகம் பார்க்கப்பட்ட போது புதிய சமயத்தினை ஏற்றுக் கொண்டனர். நோயுற்றோர் குணமாதல், உணவு, உடை, இருப்பிடம், கல்வி போன்ற காரணங்களினாலும் மதம் மாற்றம் அடைந்தனர்.

இயேசு, அவரின் தந்தை, தாய் மற்றும் புனிதர்களை வழிபடும் மக்கள், தாங்கள் வேண்டிக் கொண்ட செயல்கள் நிறைவேறுவதை மனமாற நம்பினர். அதனை மற்றவர்களுக்கும் எடுத்துரைத்தனர். இவ்வாறு கிறிஸ்தவ மக்கள் தங்கள் சமய நம்பிக்கையில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக உள்ளனர்.

## புனிதர்கள் வழிபாடு

தமிழர்கள் தங்கள் பின்பற்றப்படும் சமயங்களில் சிறு தெய்வ வழிபாடுகளையும் அத்தெய்வங்களுக்கு பலிகொடுத்தலும் நிகழ்த்தி வருகின்றனர். கிறிஸ்தவ மக்களும் சிறுதெய்வ வழிபாடாக புனிதர்களின் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

"தமிழ்நாட்டில் நாட்டார் தெய்வ வழிபாட்டில் அம்மைநோய்க்கு மாரியம்மனையும், பேய் விலகவும், காணாமல் போன பொருள் கிடைக்க சுடலைமாடனையும் இசக்கியம்மனையும் வழிபடுகின்றனர். பெருதெய்வ வழிபாட்டுடன், நாட்டார் தெய்வ வழிபாட்டையும் கொண்டிருந்த மக்கள் திரள் கிறித்தவரான பின் இவ்வழிபாடுகளைக் கை விடுவது இயல்பானதே அவர்களின் பழைய சமய வாழ்வுக்கு இணையான ஒன்றாகப் புனிதர்வழிபாடு இங்கு அண்டரிக் அடிகளாரால் சுட்டப்படுகிறது".

கொள்ளைநோய் பரவும் போது புனிதசெபஸ்தியாரையும் காணாமல் போன பொருட்கள் கிடைக்க புனிதஅந்தோணியாரையும் வேண்டிக்கொள்ளும்படி அறிவுறுத்துகிறார்கள்.

## இறந்தோர் வழிபாடு

முன்னோர் வழிபாடு என்று குறிப்பிடப்படும் இறந்தோர்களை வழிபடும் மரபு கிறிஸ்தவர்களிடையே பெருவழக்காக இருக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 2ம் நாள் தம் முன்னோர்கள் புதைக்கப்பட்ட கல்லறைகளுக்கு சென்று வழிபடுகின்றனர்.

கல்லறைகளை சுத்தம் செய்து அவர்கள் விரும்பி சாப்பிடும் பண்டங்களை வைத்து வழிபடுகின்றனர். ஊர்மக்களே ஒன்றிணைந்து கல்லறைக்கு சென்று வழிபடும் நிகழ்வு ஓர் திருவிழாவை போன்று இருக்கும்.

திருபலி நிறைவேற்றும் குருவானவர் அனைத்து கல்லறைகளையும் தீர்த்தம் கொண்டு மந்திரிப்பா். முன்னோர்களை வழிபடுவதன் மூலம் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினர்க்கும் தங்களின் முன்னோரின் ஆசிர்வாதம் கிடைக்கும் என நம்புகின்றனா்.

## பொங்கலிடுதல்

தமிழா் பண்பாட்டு விழா பொங்கல் விழா ஆகும். இவ்விழா கிறிஸ்த மக்களிடையேயும் ஓர் பண்பாட்டு ஏற்றலாக உள்ளது. தமிழர்கள் தாங்கள் மதம் மாறினாலும் தங்களின் பண்பாட்டு விழாவினை மறக்கவில்லை. இவர்கள் கொண்டாடும் பொங்கல்விழா அந்தோணியார் பொங்கள், செபஸ்தியார் பொங்கல் என பெயா் மாற்றம் அடைந்துள்ளது.

அறுவடை திருவிழா பற்றி பழைய ஏற்பாட்டில்,

"ஏப்ரல் மாதத்தில் பார்லியையும் மே மாதத்தில் கோதுமையையும் மக்கள் அறுவடை செய்தனர். அப்போது அவா்கள் எல்லோரும் மகிழ்ந்திருந்தனா்"

என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இம்மகிழ்ச்சியில் மக்கள் படைப்பின் இறைவனை மறந்துவிடவில்லை அறுவடைக் காலம் இறையருட்பெருகின் அறிகுறி ஆகவே நல்ல விளைச்சலை நல்கிய இறைவனுக்கு நன்றி செலுத்தினா்.

"அறுவடை விழாக் கொண்டாடி மகிழ்ந்த மக்கள் இவ்விழாவின் போது அறுவடையின் முதல் கனியாகிய கதிர்கட்டை இறைவனுக்கு காணிக்கை செலுத்தினா்" என பரிசுத்த வேத ஆகமம் குறிப்பிடுகிறது. இதனால் தான் அறுவடை விழா முதற்கனியின் நாள் என்று அழைக்கப்படுகிறது.

தமிழக கிறிஸ்தவா்கள் தேவாலயங்களின் முன் பொங்கலிட்டு அப்பொங்கலை அனைவரும் ஒரு பெரிய பாத்திரத்தில் இடுகின்றனா். இப்பொங்கலை குருவானவா் மந்திரித்த பின் இறைவனுக்கு படைக்கப்பட்டுவிட்டு பிறகு இறைமக்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது ஒரு சமத்துவ பொங்கலாக பார்க்கப்படுகிறது.

கிறிஸ்வ சமயம் பரவிய போது அடித்தள மக்களே இச்சமயத்தினை மேற்கொண்டனா். பின்னா் எல்லா பிரிவினரிலும் சிலா் மதமாற ஆரம்பித்தனா். "மதம் மாறிய கிறிஸ்தவா்களிடம் அவா்களின் பண்பாடுகளை உடனே விட்டு விடும்படி கூறமுடியாது. அதனை மேனாட்டினா் ஏற்க செய்தனா். பொங்கலிடும் சடங்கை டி.நொபிலி அனுமதித்துள்ளாா். இச்சடங்கு கத்தோலிக்கத்துடன் தொடா்புடையதாய் அமைய வேண்டி சிலுவையின் முன்பு பொங்கலிடச் செய்துள்ளாா்".

## அசனம் கொடுத்தல்

அசனம் என்பது உணவைக் குறிக்கும். தேவாலயங்களுக்கு வெளியில் உணவு சமைத்து வறியோர்களுக்கு கொடுக்கின்றனா். இதில் பலியிடுதலும் அடங்குகின்றது.

கடவுள் நம்பிக்கையில் ஈடுபாடு கொண்டுள்ள இறைமக்கள் தாங்கள் ஒரு செயலை தொடங்கும் முன் கடவுளை வேண்டிக் கொண்டு தொடங்குகின்றனா். அச்செயல் நன்முறையில் முடிந்தவுடன் அந்த "இறைவனுக்கு நன்றி கடன் செலுத்தும் விதமாக பலியிடுகின்றனா். ஆடு, சேவல் போன்றவற்றை பலிஇட்டு அதன் இறைச்சியை சமைத்து வழங்குதலும் "அசனம் கொடுத்தல்" என்ற பெயரில் நடைபெறுகிறது. இது கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான வழிபாட்டு எல்லைக்குள் அடங்காமல் வெகுசனக்கத்தோலிக்க வழிபாடாகவுள்ளது"

திண்டுக்கல் மாவட்டம் முத்தழகுபட்டி புனிதசெபஸ்தியார் கோவிலிலும், சக்கைய நாயக்கனூர் புனிதஅருளப்பர் ஆலயத்திலும் இது போன்ற அசனம்கொடுத்தல் நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெறுகிறது.

## மழைச்சோறுயெடுத்தல்

தமிழகத்தின் தென்மாவட்டங்களிலும் அடிக்கடி மழையின்மையால், விவசாயத்தை நம்பியிருப்போர் அதிகம் பாதிப்படைந்துள்ளனர். மழையை எதிர்நோக்கி வேளாண்மை நிகழ்வதால் அதனை வானம்பார்த்த பூமி என்பர். மழையின்றி வறட்சி தோன்றும் போது மழைச்சோறு எடுத்தல் என்ற நாட்டார் சடங்கு நிகழும்.

குறவர் சமூகத்தை சார்ந்த பெண்கள் மழைவேண்டு மழைச்சோறு பெறுவது வழக்கமாக உள்ளது. வீடு வீடாக சென்று உணவு, தானியங்களை வாங்கி வந்து ஊரின் மையப்பகுதியில் மழைவேண்டி “மழைக்கும்மி“ அடிப்பர்.

இதே வழக்கம் கிறிஸ்தவ மக்களிடையேயும் பரவியுள்ளது இங்கு. சிறுவர் சிறுமியர் கூட்டமாக வீடுவீடாகச் சென்று சோறு கேட்பர். சிறுவர் சிறுமியர் வாங்கி வந்த எல்லா வகைச் சோறுகளையும் ஒரே பாத்திரத்தில் போடப்படும். பின் இச்சோறுகளை நன்றாக கலந்து ஒன்றாக்கி எல்லோருக்கும் ஓர் உருண்டை சோறு கொடுப்பர். சாப்பிட்டபின் “கை கழுவ தண்ணீர் இல்லே“ என்று பாடல் பாடுவர்.

## திருவிழா

திருவிழா மக்களின் மகிழ்ச்சி கொண்டாட்டத்தை வெளிப்படுத்தும் நிகழ்வாக உள்ளது. தங்களின் ஊரில் இருக்கும். புனிதர்களுக்கு விழா எடுக்கின்றனர். இரண்டு நாட்கள் நடக்கும் இவ்விழாவிற்கு உறவினர்கள், நண்பர்கள் என சுற்றத்தாருடன் மகிழ்வுடன் இருக்கின்றனர். இவ்விழாவில் திருப்பலியும் தேர்பவனியும் முக்கிய இடம் வகிக்கின்றது. புனிதர்களின் செரூபத்தை ஊர்வலமாக எடுத்துக் கொண்டு தேரில் வைப்பது பின் வானவேடிக்கை, மத்தளம் முழங்க தேரினை இழுத்து ஊரைச் சுற்றி வருதல் பின் நிலைநிற்றல், செரூபத்தை கோவிலுக்குள் எடுத்துச் செல்லுதல் போன்றவை பண்பாட்டு ஏற்றலாக உள்ளது.

## முடிவுரை

கிறிஸ்தவ மக்கள் தாங்கள மேற்கொண்ட சமயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக உள்ளனர். தாங்கள் ஓர் புதிய சமயத்தை மேற்கொண்டாலும் தங்களின் பண்பாட்டு நிகழ்வுகளை மறக்காத மனிதர்களாக உள்ளனர். வழிபாட்டு மரபுகளில் புதிய மாற்றம் பெற்றுள்ளன. இதனை ஏற்க ஆரம்ப காலகட்டத்தில் கடினமாக இருந்தாலும் பின்னர் வெகு விரைவாக ஏற்றுக் கொண்டனர். திருவிழாக்களில் தங்களின் பழைய மரபு மாற்றாமல் தேர் (சப்பரம்) இழுத்தல் போன்ற நிகழ்வு நடைபெறுகிறது.

## References

Alice, A. (2004) Viviliya Tamil, International Institute of Tamil Studies, Chennai, India

Sivasubramanian, A. (2014) Tamizh Kirithavam, Kalachuvadu Publications, Nagarkovil, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License